**சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்**

முன்னிலை **திரு.S.பாஸ்கரன், M.A., LLM.,**

சார்பு நீதிபதி, ஆரணி,

2025–ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 10ம் நாள் வெள்ளிக்கிழமை

**IA.No.01/2024 in OS.No.187/2023**

**TNTM 03000432/2023**

ஆறுமுகம் ... மனுதாரர்/வாதி

/எதிராக/

1. மகேந்திரன் (இறந்தவர்) ... 1ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி
2. யசோதா
3. பிரித்தா
4. பிரகாஷ்ராஜ்
5. பிரியதர்ஷிணி ... 2 முதல் 5 எதிர்மனுதாரர்கள்/ 2 முதல் 5 ப்ரபோஸ்டு பிரதிவாதிகள்

இம்மனு என் முன்பாக 24.09.2025 அன்று விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர்கள் திரு.P.கணபதி,M.A.,B.L., திரு.V.அறிவழகன்,M.A.,B.L., ஆகியோர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.P.பவித்திரன்,B.A.,B.L., அவர்கள் முன்னிலையாகியும் இருதரப்பு வாதுரைகளை கேட்டும், சான்றாவணங்களை பரிசீலித்தும், இது நாள் வரை இந்நீதிமன்றத்தின் பிரசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

வழக்கில் இறந்த பிரதிவாதி மகேந்திரன் என்பவரின் வாரிசுகளை தரப்பினர்களாக சேர்க்க வாரிசு மனு தாக்கல் செய்வதில் ஏற்பட்ட 175 நாட்கள் காலதாமதத்தை மன்னித்து உத்தரவிடக் கோரி உரிமையியல் நடைமுறை சட்டம் பிரிவு 5ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்:–**

இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் வாதி ஆவார். மேற்படி வழக்கை மனுதாரர் 1ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு எதிராக தாவா ஷெட்யூல் சொத்து குறித்து ஏற்றதை ஆற்றுக பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார். மேற்படி வழக்கில் பிரதிவாதி வழக்கறிஞர் வைத்து ஆஜராகி, பதிலுரை தாக்கல் செய்ய வழக்கு நிலுவையில் இருக்கும் சமயத்தில் பிரதிவாதி மகேந்திரன் என்பவர் கடந்த 18.01.2024 அன்று

இறந்துவிட்டார். அவருக்கு 2 முதல் 5 எதிர்மனுதாரர்கள் மட்டுமே சட்டபூர்வ வாரிசுகள் ஆவார். அவர்களைத் தவிர இறந்த மகேந்திரனுக்கு வேறு யாரும் வாரிசுகள் இல்லை. மேற்சொன்ன மகேந்திரன் இறந்த விவரம் மனுதாரருக்கு மார்ச் 2024 மாதத்தில்தான் தெரியவந்தது. அதன் விவரம் மனுதாரர் வழக்கறிஞருக்கு தெரிவித்தபோது, பிரதிவாதியின் வாரிசுகளை வழக்கின் முழுமையின் பொருட்டு, வழக்கில் தரப்பினர்களாக சேர்க்க வேண்டுமென தெரிவித்தார். பிரதிவாதியின் சட்டப்பூர்வ வாரிசுகள் யாரென்பது மனுதாரருக்கு நேரடியாக தெரியாததால், அது குறித்து பல்வேறு நபர்களிடம் சரியான முறையில் விசாரணை செய்து விவரம் எடுத்து வந்து மனுதாரர் வழக்கறிஞருக்கு தற்போதுதான் கொடுக்க முடிந்தது. வழக்கில் இறந்த பிரதிவாதியின் வாரிசுகளை சேர்க்க அவர் இறந்த 30 நாட்களில் வாரிசு மனு தாக்கல் செய்திருக்க வேண்டுமெனவும், அதன் பின்னர் 60 நாட்களில் தாக்கல் செய்யாததால், வழக்கு அவரைப் பொறுத்து அபேட் ஆகிவிட்டது என்றும், மேலும் மேற்சொன்ன வாரிசு மனு தாக்கல் செய்வதில் தற்போது 175 நாட்கள் காலதாமதம் ஏற்பட்டுள்ளது என்றும் அதனை மன்னிக்க கோரி இம்மனு தாக்கல் செய்ய வேண்டுமென தெரிவித்தார். மேற்சொன்ன விவரங்கள் அனைத்தும் மனுதாரர் வழக்கறிஞரை தற்போது பார்த்த பின்னர்தான் மனுதாரருக்கு தெரியவந்தது. மேலும் மனுதாரர் வாரிசுதாரர்கள் விவரங்களை சேகரிப்பதில் காலதாமதமாகிவிட்டது. மேற்சொன்ன தவறுதல் வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல, தெய்வாதீனமானது, மன்னிக்கத்தக்கது. எனவே மேற்சொன்ன வழக்கில் பிரதிவாதியின் வாரிசுகளை வழக்கில் தரப்பினராக சேர்க்க வாரிசு மனு தாக்கல் செய்வதில் ஏற்பட்ட 175 நாட்கள் காலதாமதத்தை மன்னிக்க வேண்டியது மிகவும் அவசியம் என்று இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

**<u>2. 2ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிருரையை 3 முதல் 5 எதிர்மனுதாரர்கள் ஏற்றுக்கொண்ட எதிருரை சுருக்கம்:–</u>**

மேற்படி வழக்கில் இறந்த முதல் எதிர்மனுதாரரின் வாரிசுகளை வழக்கில் தரப்பினர்களாக சேர்க்க மனு தாக்கல் செய்வதில் ஏற்பட்ட 173 நாட்கள் காலதாமதத்தை மன்னிக்க கோரி தாக்கல் செய்துள்ள மனுவானது சட்டப்படியும், நியாயப்படியும் ஏற்கக் கூடியதல்ல. மனுதாரர் மனு சங்கதிகள் முழுவதையும் இவ்வெதிர்மனுதாரர் வன்மையாக மறுக்கிறார். இவ்வெதிர்மனுதாரர் ஒப்புக்கொள்ளாத மனு சங்கதிகளை மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவர். மனுதாரர் மனு பாரா 1 முதல் 6 வரையிலான சங்கதிகள் முழுவதையும் இவ்வெதிர்மனுதாரர் மறுக்கிறார். அவற்றை மனுதாரரே நிரூபிக் கடமைப்பட்டவர். மனுதாரர் மனுவில் முதல் எதிர்மனுதாரர் 18.01.2004 இறந்துவிட்டார் என்றும், மேற்சொன்ன விவரங்கள் நேரடியாக தெரியாததால், பல்வேறு நபர்களிடம் விசாரணை செய்தார் என்றும், பின்னர் வழக்கறிஞரை சந்தித்தபோது 30 நாட்களில் வாரிசு மனு தாக்கல் செய்திருக்க வேண்டுமென்றும், தற்போது 173 நாட்கள் காலதாமதம் ஏற்பட்டுள்ளது என்பதை தெரிவித்தார் என்றும், மேற்சொன்ன தவறுதல்

வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல எனவும், அதனை மன்னிக்க வேண்டியும் மனு தாக்கல் செய்துள்ளதாகவும் சொல்லியுள்ள சங்கதிகள் யாவும்: உண்மையல்ல. அவற்றை மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவர்.

3. உண்மையில், மனுதாரருக்கு, முதல் எதிர்மனுதாரர் இறந்த விவரமும், அவருடைய வாரிசுகள் யாரென்ற விவரமும் நன்கு தெரியும். உண்மையில், இவ்வெதிர்மனுதாரருக்கோ, அவரது பிள்ளைகளுக்கு மேற்சொன்ன வழக்கு விவரம் எதுவும் தெரியாது. மனுதாரர் சூதுமார்க்கமாக முதல் எதிர்மனுதாரரை ஏமாற்றி ஆவணங்கள் எழுதி ஏற்படுத்தியுள்ள விவரம் தற்போதுதான் இவ்வெதிர்மனுதாரருக்கு தெரியவந்தது. அது விவரம் வழக்கறிஞரிடம் கேட்டபோது, மனுதாரர், முதல் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட சொத்து சம்பந்தமாக கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தியுள்ளதாக தெரியவந்தது. உண்மையில் இவ்வெதிர்மனுதாருக்கு தெரியாமல் அவரது கணவரான முதல் எதிர்மனுதாரர் எவ்விதமான ஆவணமும் யாருக்கும் எழுதி கொடுத்ததோ அல்லது கையெழுத்து செய்து கொடுத்ததோ கிடையாது. மனுதாரர், இவ்வெதிர்மனுதாரரின் கணவரை மோசடி செய்து அவரிடம் பணம் பறிக்கும் எண்ணத்துடன் மேற்சொன்ன வழக்கினை தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் தெரியவந்துள்ளது. மேலும் இவ்வெதிர்மனுதாரருக்கு விவரம் தெரிந்துவிடக் கூடாது என்று சமாளிக்க வேண்டியே மனுதாரர் 173 நாட்களை காலம் கடத்தி தற்போது மனு தாக்கல் செய்துள்ளார். எனவே மனு நிலைக்கத்தக்கதல்ல. மனு மாலஃபைடாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே அது தள்ளுபடி செய்யப்பட வேண்டியது. எனவே மனுதாரர் மனுவை செலவுடன் தள்ளுபடி செய்யுமாறு 2ம் எதிர்மனுதாரர் எதிருரை தாக்கல் செய்துள்ளார்.

4. இம்மனுவில் தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சனையில் உள்ள சங்கதி என்னவென்றால், இம்மனு அனுமதிக்கத்தக்தா? இல்லையா? என்பதே ஆகும்.

5. <u>பிரச்சனைக்கான தீர்வு:–</u>

இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. இருதரப்பிலும் சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. அசல் வழக்கானது ஏற்றதை ஆற்றுக பரிகாரம் வேண்டி வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கு நிலுவையில் இருந்தபோது பிரதிவாதி/1ம் எதிர்மனுதாரர் கடந்த 18.01.2024 அன்று இறந்துவிட்டார். இறந்த பிரதிவாதிக்கு இம்மனுவில் குறிப்பிட்டுள்ள 2முதல் 5 எதிர்மனுதாரர்கள் தான் வாரிசுகள். 2 முதல் 5 எதிர்மனுதாரர்களை அசல் வழக்கில் தரப்பினர்களாக சேர்க்க கோரி மனு தாக்கல் செய்யததால் வழக்கு அற்றுப்போனதை ரத்து செய்வதற்கு மனு தாக்கல் ஏற்பட்ட 175 நாட்கள் காலதாமதத்தை மன்னிக்கவேண்டி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த மனுவுடன் மனுதாரர் தரப்பில் பிரதிவாதியின் வாரிசுகளை சேர்க்க மனு உரிய

நேரத்தில் தாக்கல் செய்யாததால் ஏற்பட்ட நீக்கரவை (Abatement) ரத்து செய்ய கட்டளை 22 விதி 9ன் கீழ் இ.ம.எண்.2/2024 மற்றும் பிரதிவாதியின் வாரிசுகளை சேர்க்க கட்டளை 22 விதி 4ன் கீழ் இ.ம.எண்.3/2024 தாக்கல் செய்துள்ளார்கள்.

6. 2ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிருரையை 3 முதல் 5 எதிர்மனுதாரர்கள் ஏற்றுக்கொண்டுள்ளார்கள். மனுதாரருக்கு, முதல் எதிர்மனுதாரர் இறந்த விவரம் அவருடைய வாரிசுகள் யார் என்ற விவரம் நன்கு தெரியும், இந்த எதிர்மனுதாரருக்கோ அவரது பிள்ளைகளுக்கோ மேற்படி வழக்கு விவரம் எதுவும் தெரியாது. 1ம் எதிர்மனுதாரரை ஏமாற்றி மனுதாரர் சூதுமார்க்கமாக ஆவணங்கள் ஏற்படுத்தியுள்ள விவரம் தற்போது தான் இந்த எதிர்மனுதாரருக்கு தெரியவந்தது. 1ம் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட சொத்து சம்மந்தமாக கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தியுள்ளதாக தெரிய வந்தது. இந்த எதிர்மனுதாரருக்கு தெரியாமல் அவரது கணவரான 1ம் எதிர்மனுதாரர் எந்த ஆவணமும் யாருக்கும் எழுதிக்கொடுத்தது கிடையாது. பணம் பறிக்கும் எண்ணத்துடன் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். எனவே இந்த மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்று எதிருரை தாக்கல் செய்து எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது.

7. வழக்கின் பிரதிவாதியான இறந்துபோன மகேந்திரன் என்பவரின் வாரிசுகளை அசல் வழக்கில் சேர்க்க அனுமதிவேண்டி மனுதாரர் தரப்பில் 3 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. கடந்த 18.01.2024ம் தேதி பிரதிவாதி மகேந்திரன் இறந்துள்ளார். அவரின் வாரிசுதாரர்களை சேர்க்க உரிய நேரத்தில் மனு தாக்கல் செய்யவில்லை என்பது இம்மனுவின் மூலம் தெரியவருகிறது. இறந்த மகேந்திரனின் வாரிசுகள் யார் என்பது மனுதாரருக்கு நேரடியாக தெரியாததால் அது குறித்து பல்வேறு நபர்களிடம் விசாரணை செய்து விவரம் தெரிந்துக்கொண்டு வழக்கறிஞரிடம் தகவல் கொடுக்க காலதாமதம் ஏற்பட்டது என்று இம்மனுவில் காரணம் கூறப்பட்டுள்ளது. இம்மனுவில் கூறப்பட்டுள்ள காரணம் ஏற்க்கும்படி இல்லை என்றாலும் அசல் வழக்கை மேல் நடத்தி தீர்வு காண்பதற்கு இறந்துபோன பிரதிவாதியின் வாரிசுகளை அசல் வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவேண்டியது அவசியமாகும். இறந்து போன மகேந்திரனின் வாரிசுகள் 2 முதல் 5 எதிர்மனுதாரர்கள் என்று மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த விவரத்தை எதிர்மனுதாரர்கள் மறுக்கவில்லை. இம்மனுவை அனுமதிப்பதினால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித இழப்பும் ஏற்படாது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. அசல் வழக்கை தீர்வு காண்பதற்கு இருதரப்பு விசாரணை அவசியம் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே மனுதாரருக்கு ஒரு வாய்ப்பினை அளிப்பது இயற்கை நீதியின்பால் அமையும் என்று முடிவு செய்து இம்மனுவை இந்நீதிமன்றம் அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

**முடிவாக,** இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை குறித்து உத்தரவு இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, 2025 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 10ஆம் நாளாகிய இன்று என்னால் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்படுகிறது.

BASKARAN S

Digitally signed by BASKARAN S
Date: 2025.10.10 17:41:52 +0530

சார்பு நீதிபதி,
ஆரணி.

**<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:-</u>** இல்லை

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றிவணங்கள்:-</u>** இல்லை

BASKARAN S

Digitally signed by BASKARAN S
Date: 2025.10.10 17:42:00 +0530

சார்பு நீதிபதி,
ஆரணி.